பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 09 2026 FRIDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வெளிநாட்டு நன்கொடைகளை முறைப்படுத்துவதற்கான சட்டத்திருத்த மசோதா தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டு குழுவின் முதல் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.
2. பிரதமர் திரு.நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொது சேவைகள், இந்தியப் பொருளாதாரத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாக, நியூசிலாந்து அமைச்சர் திரு. Todd McClay தெரிவித்துள்ளார்.
3. பூடானின் வளர்ச்சிக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
4. பாலஸ்தீன அதிபர் திரு. Mahmoud Abbas, ஐ.நா. சபையில் நடைபெற உள்ள உயர்மட்டக் கூட்டத்தில், காணொலி வாயிலாகப் பங்கேற்க, ஐ.நா. அனுமதி அளித்துள்ளது.
5. போர்ச்சுக்கல் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Rutuja Bhosale ஆஸ்திரேலியாவின் Elena Micic இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

------------

வெளிநாட்டு நன்கொடைகளை முறைப்படுத்துவதற்கான சட்டத்திருத்த மசோதா தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டு குழுவின் முதல் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

இன்றைய கூட்டத்தில், மசோதாவில் உள்ள விஷயங்கள் குறித்து, உள்துறை அமைச்சக பிரதிநிதிகள் நாடாளுமன்ற கூட்டு குழுவினருக்கு எடுத்துரைக்கின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து தனி நபரோ அல்லது அமைப்புகளோ வெளிப்படை தன்மையுடனும், முறையான தணிக்கையுடனும் நன்கொடைகளை பெறுவதற்கு இம்மசோதா வகை செய்கிறது.

இந்த நாடாளுமன்ற கூட்டு குழுவில் 21 மக்களவை உறுப்பினர்களும், 10 மாநிலங்களவை உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் நாடாளுமன்ற கூட்டு குழுவின் தலைவராக மக்களவை உறுப்பினர் திரு. சஞ்ஜய் ஜெய்ஸ்வால் நியமிக்கப்பட்டுள்ளார்.

------------

பிரதமர் திரு.நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால பொது சேவைகள், இந்தியப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தி இருப்பதாக, நியூசிலாந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் துறை அமைச்சர் திரு. Todd McClay தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்படுத்தும் திட்டங்களால், இந்தியப் பொருளாதாரம் மட்டுமின்றி, இந்தியா மற்றும் நாட்டு மக்களின் செல்வமும், வெகுவாக உயர்ந்துள்ளதாக கூறினார்.

உலகின் பிற நாடுகளில் இல்லாத வகையில், இந்தியாவில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, புதிய பல்கலைகழகங்கள் பெருமளவு தொடங்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

கட்டமைப்புத் துறையிலும் பெருமளவு முதலீடு செய்யப்படுவதையும் அவர் குறிப்பிட்டார்.

2035-ம் ஆண்டுக்குள், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான பிரதமர் திரு.நரேந்திர மோடியின் முன்னெடுப்புகளில், நியூசிலாந்தும் பங்கேற்கும் என்று அமைச்சர் திரு. Todd McClay கூறினார்.

------------

பூடானின் வளர்ச்சிக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர். ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தமது இரண்டு நாள் பூடான் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பூடானின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Dhungyel-வுடன் இருதரப்பு ஒத்துழைப்பு, மண்டல மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு குறித்து தாம் நடத்திய பேச்சுகள் ஆக்கப்பூர்வமானதாக அமைந்திருந்தது என்று தெரிவித்தார்.

அந்நாட்டின் பல்வேறு நலத்திட்டங்களை அவருடன் இணைந்து தொடங்கி வைத்ததாகவும் அவர் கூறினார்.

தாய்சேய் நல மருத்துவமனை மற்றும் நெடுஞ்சாலை திட்டங்கள், தேசிய கால்நடை இனப்பெருக்க மையம், அரசுக்கான மின்சார வாகன சேவை, 500 கிலோவாட் நீர்மின் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் இந்தியாவின் உதவியுடன் பூடானில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

------------

இந்தியா மற்றும் நேபாளத்தில் தயாரிக்கப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து, இருநாடுகளும் ஆலோசனை நடத்தியுள்ளன.

இது தொடர்பாக, மத்திய வர்த்தக-தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற, இருநாட்டு அரசுகள் அளவிலான துணைக்குழு கூட்டத்தில், இந்தியத் தரப்பில் வர்த்தகத்துறை இணைச் செயலாளர் திரு. உஜ்வல் குமார் கோஷ் தலைமையிலான குழுவினரும், நேபாள தரப்பில், அந்நாட்டு தொழில்துறை இணைச் செயலாளர் திரு. புத்த பகதூர் Gurung தலைமையிலான குழுவினரும் பங்கேற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தை அணுகுதல், சுங்கவரி மற்றும் வர்த்தக நடைமுறைகள், உணவு பாதுகாப்பு, எல்லைப்புற கட்டமைப்பு, சாலை மற்றும் ரயில் போக்குவரத்து வசதி உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளும் வழங்கும் சலுகைகள், தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பது, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைத்தல் போன்றவை குறித்தும் விவாதிக்கப்பட்டதாக, மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

------------

மகாராஷ்டிரா மாநிலத்தில் Chouk - Karjat இடையிலான ரயில் பாதையை, இரட்டைப் பாதையாக மாற்றும் திட்டத்திற்கு, ரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

497 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்தின் மூலம், மகாராஷ்டிராவில், பயணியர் மற்றும் சரக்கு ரயில் போக்குவரத்து அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரட்டை ரயில் பாதைப் பணிகள் நிறைவடையும்போது, இரு மார்க்கங்களிலும், நாள்தோறும் கூடுதலாக 5 பயணியர் ரயில்களை இயக்கவும், ஆண்டுக்கு 18 புள்ளி மூன்று ஐந்து மில்லியன் டன் சரக்குகளை அனுப்ப வழிவகை ஏற்படும் என்று ரயில்வே கூறியுள்ளது.

------------

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கான பயணத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலைமையிலான அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

திரு நரேந்திர மோடியின் 25 ஆண்டுகால அரசியல் பயணம் மக்கள் சேவையே தேசத்தின் சேவை என்ற உறுதிப்பாட்டோடு நடைபெற்று வருகிறது.

உள்ளார்ந்த வளர்ச்சியும், சமூகத்திற்கான அதிகாரமும், மக்கள் வாழ்க்கையில் வளமான மாற்றங்களையும், மத்திய அரசு கொண்டு வரும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், ஒரு மாத கால சேவை உறுதிமொழி இயக்கம் நேற்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

தூய்மையே சேவை இயக்கத்தின் மூலம் சமூக மற்றும் சுகாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இன்றைய தொகுப்பு விவரிக்கிறது.

------------

பாலஸ்தீன அதிபர் திரு. Mahmoud Abbas, ஐ.நா. சபையில் நடைபெற உள்ள உயர்மட்டக் கூட்டத்தில், காணொலி வாயிலாகப் பங்கேற்க, ஐ.நா. அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச்சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில், இந்தியா உட்பட 152 நாடுகள், தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்ததையடுத்து, இத்தீர்மானம் நிறைவேறியது.

அமெரிக்கா, இஸ்ரேல், பராகுவே நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த நிலையில், நான்கு நாடுகள், வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

தீவிரவாதத்திற்கு ஆதரவளிப்பதை பாலஸ்தீனம் நிறுத்தவில்லை என்றுகூறி, திரு. Mahmoud Abbas, ஐ.நா. கூட்டத்தில் பங்கேற்பதற்காக, நியூயார்க் வருவதற்கு விசா வழங்க அமெரிக்கா மறுத்துவிட்டதையடுத்து, இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

------------

ரஷ்யாவுக்கு எதிராக தாக்குதல் நடத்திவரும் யுக்ரைன், ஏவுகனைகள் மற்றும் ட்ரோன்கள் வாங்குவதற்காக, அந்நாட்டிற்கு, 3 புள்ளி 3 பில்லியன் யூரோ நிதியுதவி வழங்கப்படும் என ஐ.ரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி. Ursula Von der Leyen அறிவித்துள்ளார்.

யுக்ரைன் அதிபர் திரு. Volodymyr Zelensky –யுடன் தொலைபேசி வாயிலாக நடத்திய ஆலோசனையைத் தொடர்ந்து, இந்த நிதியுதவி அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

போர்ச்சுக்கலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Rutuja Bhosale ஆஸ்திரேலியாவின் Elena Micic இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-2, 10-6 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Kylie Collins போர்ச்சுக்கலின் Angelina இணையை வென்றது.

<<<<END>>>>